**கலேவல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

10 வரவு விடயங்களில் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே 12 வருடங்களுக்கு முன்னிருந்து காணப்படுகின்ற ரூபா 2,306,910 தொகையான வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 4,345,878 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 80 மயானங்களுக்குரிய 109.5 ஏக்கர் மற்றும் 25 பேர்ச் காணியின் அளவு மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 600,000 பெறுமதியான தொரகட்டிவெல காணி நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா WPRV- 2765 ஆம் இலக்க கலிபௌசர் 3,000,000 பெறுமதியாக இருந்த போதிலும், ரூபா 300,000 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 2,700,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்கப்படாத பெறுமதி கண்டுபிடிக்கப்பட முடியாத 46-4418 ஆம் இலக்க பழைய நீர் பவுசர் மற்றும் ரூபா 97,850 பெறுமதியான 52343 ஆம் இலக்க புல் வெட்டும் இயந்திரத்தின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான குழாய் உதிரிப் பாகங்கள் இருப்பு ரூபா 676,585 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது,

(ஏ) நிர்மாண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 284,492 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் மாகாண சபை உறுப்பினர் மானியத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமொன்றின் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 175,043 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நூலக அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த மீளச் செலுத்தப்படாத ரூபா 41,200 ஆன வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்காமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) சபை அதிகார பிரதேசத்தில் அறிவித்தல் பதாதைகளை காட்சிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டிற்குரிய வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 132,393 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்காக கேள்விதாரர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 2,717,250 தொகை மூலதன பெறுவனவுகளின் கீழும் அந்நிர்மாணங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,218,237 தொகை மூலதனச் செலவினத்தின் கீழும் கணக்கீடு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கிற்கு செலவு மற்றும் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், பெறவேண்டிய ரூபா 15,584,000 பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 278,741,097 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 107,294,030 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கு மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் இருப்பு மீதிகளுக்கிடையே ரூபா 2,935,427 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராது முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,086,634 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 03 கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 13,981,626 ஆக இருந்ததுடன், ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 3,630,183 கூட்டுத்தொகையான மீதிகளும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 12,982,570 கூட்டுத்தொகையான மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி நிர்வாகம்) 212 விதி | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 364,905 பெறுமதியான பொருட்கள் களஞ்சியப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 189 | 2003 - 2006 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த மதிப்பிழந்திருந்த ரூபா 60,517 தொகையான 03 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருடங்களை கடந்த ரூபா 1,579,021 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 1645 | 2012 முதல் 2015 வரை காலப்பகுதிக்கு சபையின் 17 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது விலை விபரங்கள் கோரி நேரடியாக காப்புறுதி வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், விலைகோரல் மேற்கொள்ளாமல் காப்புறுதி முகவர்கள் மூலம் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 431,376 ஆன தொகைக்கு காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,369,664 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,836,141 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 533,523 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

(அ) நிதி விளைவுகளில் ரூபா 533,523 ஆன அதிகரிப்பிற்கு 02 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் செலவின விடயமொன்றில் குறைவு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினம் ஒப்பிடப்பட்டு 06 நிகழ்ச்சித்திட்டங்களில் 03 நிகழ்ச்சித்திட்டங்களில் வருமானத்தை விஞ்சிய செலவினம் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் 03 நிகழ்ச்சித்திட்டங்களில் மூலதனப் பெறுவனவுகளை மிகைத்த மூலதனச் செலவினம் ரூபா 9,526,899 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் பேணிச்செல்லப்படும் நீர் வழங்கலுக்காக பொருத்தப்பட்டிருந்த செயற்பாடற்ற நீர்மானிகளை செயற்படுத்தி நீர் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலையான கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் நீர் வருமானம் ரூபா 1,444,162 ஆக இருந்ததுடன், நீர்ச் செலவினம் ரூபா 2,392,488 ஆக இருந்தமையால் செலவினத்தை தீர்ப்பதற்கும் வருமானத்தை உழைக்க முடியாமல் இருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 ஆதன வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 1,278,997 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 417,040 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.3.3 ஏக்கர் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 47,967 ஆன நிலுவை மீதியில் ஆண்டினுள் ரூபா 2,762 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 5% பெறுமதியாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 55,974 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 45,205 தொகையான மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

### 2.3.4 நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 106,724 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 49,322 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.3.5 கேளிக்கை வரி

10 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற நிலுவை கேளிக்கை வரி மீதி ரூபா 6,948 ஆக இருந்ததுடன் அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

05 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 691,370 ஆக இருந்ததுடன், அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 இறைச்சிக் கடை வாடகை

05 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதி ரூபா 84,580 ஆக இருந்ததுடன், அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.8 அறிவித்தல் பலகைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதைகளிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 7(ஊ) மற்றும் XXX உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 132,393 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.9 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 90 வியாபாரங்கள் தொடர்பாக 2000 இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 47 ஆவது தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பரீட்சித்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.10 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 06 வியாபார தொகுதிகளின் குத்தகை வாடகை இறுதியாக திருத்தம் செய்யப்பட்டு 15 ஆண்டுகள் கழிந்திருந்த போதிலும், குத்தகை வாடகையை திருத்தி உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட முடியாத போதிலும் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடைகள் தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலேவல நகரின் புதிய வியாபாரத் தொகுதியின் 26 கடைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீடு ஒன்றில்லாமல் கடையின் மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு கேள்வி அளிப்புச் செய்யப்பட்டிருந்தது, மேலும் குத்தகையாளர்கள் உடன்டிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாமையால் ரூபா 6,120,025 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் உடன்படிக்கை மீறல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிம்சவிய அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்று மதிப்பீடு செய்யப்படாமல் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் ரூபா 25,000 ஆன மாதாந்த வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.3.11 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 2,848,550 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 11,058,272 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.4 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 118,100 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் 16 ஊழியர்களுக்கான வெற்றிடங்களும் மிகை பதவிகள் 12 உம் காணப்பட்டன.

(ஆ) முறையான மதிப்பீடொன்றில்லாமல் ரூபா 522,091,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கலேவல நகரில் வீதிகளை தோண்டும் போது சேதமடையும் குழாய்களுக்கு பொருத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,173,405 பெறுமதியான நீர் உபகரணங்கள் தேவைப்பாட்டிற்கு ஏற்ப விநியோக கட்டளை மூலம் வழங்காமல் முழு இருப்பினையும் நீர் தொழிலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் சனசமூக மண்டபத்தை நிர்மாணிப்பதற்னகாக 2015 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா 748,110 பெறுமதியில் நிர்மாணப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டமைக்கு அளவீட்டுப்பத்திரம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை காணப்படாதிருந்ததுடன் இச்சனசமூக மண்டபத்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்த ரூபா 746,295 பெறுமதியான நீர்த் தாங்கிகள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரைகள் என்பன நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2015 நவம்பர் 15 ஆந் திகதி அளவில் பகிர்ந்தளித்தல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2016 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களின் வேண்டுகோளின் பேரில் மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமலும் முறையான அங்கீகாரமொன்று இல்லாமலும் மோட்டர் கேடர் இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 85,248 ஆன எரிபொருள் செலவினம் செலவிடப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

கலேவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் சமூக அமைப்பின் மூலம் பராமரிக்கப்படும் நீர் முன்மொழிவு முறைமையின் மேற்பார்வை பலவீனமான நிலைமையில் காணப்பட்டதன் காரணமாக சிக்கலான நிலைமையொன்றுக்கு உட்பட்டிருந்தது. இந்த நீர் முன்மொழிவுத் திட்டம் கண்காணிக்கப்பட்டு வருமான நிலைமையை மேம்படுத்துவதற்கு தேவையான சொத்துக்களை அதன் வருமானத்திலிருந்தே பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் பொது நிதியத்திலிருந்து ரூபா 254,555 செலவு செய்து நீர் மோட்டார் ஒன்றும் உப பாகங்களும் வழங்கப்பட்டிருந்தன.

**3.4 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பொது நிதியிலிருந்தும் கேள்விதாரர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்ட நிதியைப் பயன்படுத்தி கலேவல நகரில் ரூபா 2,679,804 தொகை செலவு செய்து 2015 ஆம் ஆண்டில் மீன் விற்பனை நிலையத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த மீன் விற்பனைத் தொகுதி நிர்மாணத்தின் போது உரிய நிறுவனங்களிலிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் கால்வாய் ஓரத்தில் உரிய தரத்துடன் நிர்மாணிக்கப்படாததன் காரணமாக மழையினால் கால்வாயின் பக்கச் சுவருக்கும் சேதத்தை ஏற்படுத்தி 02 கடைகளும் முழுமையாக சிதைவடைந்தும் 03 கடைகளைப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமைக்கும் உட்பட்டிருந்தமையால் செலவிடப்பட்ட முழுத் தொகையும் சபைக்கு நட்டமொன்றாக இருந்ததாக 2015 நவம்பர் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 28,785 பெறுமதியான 26 கல்வனைஸ் குழாய்கள் பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 3,000,000 பெறுமதியான WPRV - 2765 ஆம் இலக்க கலி பவுசரும் ரூபா 79,000 பெறுமதியான 73-4153 ஆம் இலக்க குபோட்டா கை உழவு இயந்திரமும் என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2016 சனவரி மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பொருட்கள் பரிசோதனையின் பின்னர் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்வு பரிசோதனையின் போது களஞ்சியத்திலிருந்த ரூபா 1,121,143 பெறுமதியான நீர்க் குழாய் இருப்புக்கள் இம் மெய்மையாய்வின் போது கைவிடப்பட்டிருந்த காரணத்தினால் இம்மெய்மையாய்வு அறிக்கை பூரணமானதாக இருக்கவில்லை.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவிற்கு இணங்காமல் மீளாய்வாண்டில் வாழ்த்து அட்டைகள் கொள்வனவிற்காக ரூபா 28,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரச ஊழியரொருவர் அல்லாத வெவ்வேறு நிறுவனங்களில் ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருந்த நபரொருவரை ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவராக ஆட்சேர்ப்பு செய்து 2014 ஆகஸ்ட் முதல் 2015 யூன் வரை ரூபா 251,600 ஆன படிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2015 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மே மாதத்திற்கான உறுப்பினர் எரிபொருள் மற்றும் தொலைபேசிப் படிகள் என்பன முழு மாதத்திற்கும் செலுத்தப்பட்டமையால் ரூபா 23,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

**தென்னகோன்புர கல்வெடியாவ வீதி வெட்டுக்கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்தல்**

மாகாண எழுச்சி நிதிஏற்பாட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மேற்குறித்த வீதி 602.7 சதுர மீற்றருக்கு 24108 கொங்கிரீட் வெட்டுக்கற்கள் பரப்புவதற்காக ஒன்று ரூபா 38 வீதம் ரூபா 916,104 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 560.66 சதுர மீற்றருக்கு ரூபா 852,188 தொகை ஆதலால் ரூபா 65,916 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் வீதியின் 02 இரண்டு இடங்களில் வெட்டுக்கற்கள் கீழிறங்கியிருந்தன.

## 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மத்திய மாகாண சுற்றாடல் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 03 மில்லியன் நிதி உதவியின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது மேவுகையுடன் கூடிய கழிவுகளை அகற்றும் 02 வடிகாண்கள் (100''x25'') மற்றும் கழிவுப் பொருட்களை தெரிவு செய்வதற்கான தளம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 700,000 செலவு செய்து கூட்டுப்பசளை தளத்தின் கூரை திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுன்ற 2.5 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகளில் உக்கலடையும் கழிவுப்பொருள் வடிகாணுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. 01 ஆம் இலக்க வடிகாணில் கழிவுகள் உக்கலடையும் செயற்பாடு முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. 02 ஆம் இலக்க வடிகாண் தாழ்ந்த இடமொன்றில் தாபிக்கப்பட்டிருந்தமையால் மழை நீர் வடிந்து செல்வதால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்ததுடன் பாரிய தொகையொன்று செலவு செய்யப்பட்டிருந்த இச் செயற்திட்டம் வெற்றியளிக்காத நிலையில் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமான மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 செலவினங்களுக்கான ரூபா 172,000 தொகையான மொத்த நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 50 செலவின விடயங்களின் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 4,285,500 தொகை வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(இ) 40 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 9% முதல் 180% வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு அலுவலகத்தின் ஏனைய கடமைகளும் கையளிக்கப்பட்டமையால் வெற்றிகரமாக உள்ளகக் கணக்காய்வை செயற்படுத்த முடியாதிருந்தது.

## 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்தக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(எ) மனித வள முகாமைத்துவம்